CASE NO : ID 54/2025

NAME : WW1 – கார்த்திகேயன்

DATE : 05.02.2026

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்ட பின்பு குறுக்கு விசாரணை

நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் ஓட்டுநராக கடந்த 2009 முதல் பணியாற்றி வருகிறேன். கடந்த 2020 ல் கோரோனா காலகட்டத்தில் என்னை எவ்வாறு வேலைக்கு அழைத்தார்கள் என்றால் யாரும் வர வேண்டாம், தேவைப்பட்டால் கைப்பேசி மூலமாக தேவைப்படும் சமயத்தில் பேருந்தை இயக்குவதற்கு வர அனுமதித்தார்கள். அந்த காலகட்டத்தில் குறைந்த எண்ணிக்கையிலான பேருந்துகளே அத்தியாவசிய தேவைக்காக இயக்கப்பட்டது. அந்த சமயத்தில் அழைப்பேசியில் அழைத்தால் நான் வேலைக்கு செல்வேன். அந்த காலகட்டத்தில் முழுமையாக அனைவருக்கும் சம்பளம் வழங்கப்பட்டது என்றால் சரிதான். கோரோனா சமயத்தில் அத்தியாவசிய தேவைக்கு அழைக்கும் போதும் சில ஓட்டுநர்கள் பணிக்கு வராமல் மறுத்த ஓட்டுநர்களும் இருந்தார்கள் என்றால் சரிதான். ஆனால் குறிப்பிட்டு தெரியாது. அவ்வாறு வராத காலகட்டங்களில் முழுமையாக

சம்பளம் வழங்கப்பட்டு ஆனால் விடுப்பு கணக்கில் மட்டும் கழித்து விட்டார்கள் என்றால் சரிதான். 21.04.2020 முதல் 20.05.2020 வரையிலான காலத்திற்கு பேருந்தை முழுமையாக இயக்க முடியாத சூழ்நிலை இருந்தது என்றால் சரிதான். அந்த சூழ்நிலையில் தான் 2 நாட்கள் ஈட்டிய விடுப்பு கழிக்கப்பட்டது என்றால் சரிதான். தொழிலாளர்களுக்கு சுழற்சி முறையில் திங்கள், புதன், வெள்ளி மற்றும் செவ்வாய், வியாழன், சனி என்று சுழற்சி முறையில் அரசாணை பிறப்பித்து அதன் படி தான் பணியமர்த்தப்பட்டார்கள் என்றால் சரிதான். பேருந்தை இயக்குவது என்பது அத்தியாவசிய தேவைக்காக மற்றும் மக்களுக்காக உள்ள பொது நிறுவனம் என்றால் சரிதான். நான் நீலிகோணம் பாளையத்தில் வசித்து வருகிறேன். அங்கிருந்து தான் பணிக்கு வருகிறேன். எனக்கு நகர பேருந்தை இயக்குவது தான் பணி. தொலைபேசியில் அழைத்தும் பணிக்கு வராத தொழிலாளர்களுக்கு மட்டுமே ஈட்டிய விடுப்பு கழிக்கப்பட்டு மறுநாள் வேலைக்கு வரும் போது அது தெரிவிக்கப்பட்டும், சம்பள பிரதியில் குறிப்பிட்டும் உள்ளது என்றால் வாய்மொழியாகவும், எழுத்து மூலமாகவும் தெரிவிக்கப்படவில்லை. சம்பள பிரிதியை பார்த்த பின்பு தான் ஈட்டிய விடுப்பு கழிக்கப்பட்ட விவரம் தெரியும்

என்றால் சரிதான். ஈட்டிய விடுப்பு எனக்கு தெரியாமல் கழிக்கப்பட்ட விவரத்தை குறித்து மேலதிகாரிக்கு வாய்மொழியாகவோ் அல்லது எழுத்து மூலமாகவோ அணுகி பரிகாரம் கேட்டேனா என்றால் வாய்மொழியாக தான் கேட்டுள்ளேன். எழுத்துமூலமாக கேட்கவில்லை. நான் பணிக்கு அழைத்தும் வராத காரணத்தினால் தான் ஈட்டியவிடுப்பு கழிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் மேலதிகாரியை அணுகாமல் நேரடியாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.